
136


# ஆபதுத்தாரணர்மாலை




136/261

ருமை ஆதீனம்
1961

Q23
A6
174324



தருமையாதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 495

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

பத்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய

சுவாமிகள் அருளிய

# ஆபதுத்தாரணமாலை

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள் அவர்களது

திருவுள்ளப் பாங்கின்வண்ணம்

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில்

வெளியிடப்பெற்றது.

1961

174324

ஞானசம்பந்தம் அச்சகம்,

தருமபுரம்.

உ

சிவமயம்

# முன்னுரை

o25 N61

சீகாழி ஸ்ரீ சட்டைநாதப்பெருமான் தமிழ்நாட்டின் பல குடும்பங்களின் குலதேய்வம். கண்கண்ட தேய்வமாய்க் கலியுகவரதராய் விளங்குபவர் இவர்.

ஸ்ரீ முத்துச்சட்டைநாதர் சட்டைநாதப்பெருமானின் உற்சவர். இப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தருமையாதீனம் 25 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் புறப்பாடு செய்விக்கப்பெறுகிறது.

ஸ்ரீ சட்டைநாத சுவாமிக்கு ஆறுவது ஆண்டு சிறப்பு வழிபாடு இவ்வாண்டு 5—5—61 வெள்ளியன்று நிகழ்கிறது. ஸ்ரீ சட்டைநாதர் புறப்பாட்டு விழா நினைவாக, தருமையாதீனம் 10 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் அருளிச்செய்த ஆபதுத்தாரணர்மாலை வெளியிடப்பெறுகிறது.

அன்பர்கள் படித்துப் பயன்பெறுவார்களாக.

சீகாழி தேவஸ்தானம், 5—5—1961. } வித்துவான். இராமலிங்கத்தம்பிரான்
கட்டளை விசாரணை

உ

சிவமயம்

துங்கமாமணித் தூணில்வந் திரணியன்
தோள்வலி தனைவாங்கும்
சிங்கவேற்றுரி யரைக்கசைத் துலகெலாந்
தேர்ந்தளந் தவன்மேனி
அங்கம்யாவுமோர் கதையதாய்க் கொண்டதன்
அங்கியாப் புனைகாழிச்
சங்கவார்குழைச் சட்டைநாயகன் துணைத்
தாமரைச் சரண்போற்றி.

உ

சிவமயம்

# ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்

தருமையாதீனம் 10ஆ வது குருமகாசந்நிதானமாகிய ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் இவ்வுலகில் நிகழ்த்திய வியத்தகு செயல்கள்பல. வழங்கிய ஞானேபதேசங்களால் மெய்யறிவுபெற்ற மக்களின் தோகைகளும் மிகப்பல.

ஒருநாளிரவு தண்ணிலவு சோரியும் வேளையில் சித்தர் ஒருவர் விண்ணக வேளியிலே ஊர்ந்து செல்பவர் இம் மடாலயத்தின் மேலே செல்லுங்கால் அவர் சேலவு தடைப் பட்டது. ஒரு நேறியுமறியாது திகைத்துப் பின்னர், இங்கு யாதானும் ஒரு சிறப்பு இருக்கவேண்டுமேன்று கீழ் நோக்கினர். அப்போது நிலாமுற்றத்தில் ஒருவரின் நிழல் விழுவதையறிந்த குருமூர்த்திகள் நிழலே நோக்கி விரலால் சுட்டி வாவேன்றழைத்தார்கள். நிழலே த்தரும் போருளான சித்தரும் ஏதோ மந்திரத்தாற் கட்டுண்ட மாநாகம்போலத் தன்னிலேயற்றுக் குருமூர்த்திகள் திருமுன் வந்தனர். பரவசமாகி, சித்துக்களும் ஒரு சேருக்குத் தருவதேன்பதை யுணர்ந்தனர். ''ஆசிரியப்பேரும ! சிவஞானப் பேறளித்துத் திருவடிக்கன்பனுக்குக'' என்று மனங்குழைந்து, திருவடிகளில் வீழ்ந்துவேண்டினர். குருமூர்த்திகளும் கருணை கூர்ந்து பக்கலில் அழைத்து, திருவருநோக்கம் செய்து, தீக்கையும் புரிந்து. தம் அடியார் குழாத்துள் ஒருவராக இருக்கவும், சிவஞானச்சேல்வம் நாடோறும் பெருக்கவும் திருவருள் பாலித்தார்கள். அவர் இங்ஙனம் வதியுநாளில்

காயகற்பங்களையுண்டு பழகிய அவருக்கு மடாலயத்தி லுள்ள அறுசுவையுண்டியால் உடல்நிலை வேறுபட்டது. அஃதுணர்ந்த ஞானதேசிகர் அடியார் குறிப்பறிந்து திருநீறு அளித்தனர். சித்தர் அதனைப் போற்றியணியவே உடலும் நலம்பெற்றது. உடல் பெற்ற பயன் குருபணிவிடை செய் தலே என்பதைக் குறிக்கொண்டு இடையறாது இயற்றிவந்து சின்னாட்களில் சிவத்துடன் கலந்தார்.

சேதிமாநகரத்து வேளாளர் ஒருவர். மாமியார் மருமகள் இருவரோடும் குருதரிசனத்துக்குத் தருமை போந்தனர். குருமகாசந்நிதானத்தை இறைஞ்சி மருமகளைச் சுட்டிக் காட்டி "இந் நங்கைக்குச் சிவதீக்கை செய்தருள்க" என்று வேண்டிக் கொண்டனர். குருமூர்த்திகளும் 'மறுநாள் சொக்கநாதர் பூசை வேளையில் வருக' என அருளாணை தந்தனர். அவ்வண்ணமே அவர்கள் தூய்மையோடு வர' பூசை மடத்துக்குள் அழைத்துச்சென்று முறைப்படி சிவ தீக்கை செய்வித்தார்கள். குருதீக்கையால் ஞானவளர்ச்சி யடைந்த அந் நங்கை, ஆண்டிலும் முதிரப் பெற்று செந் தமிழ்ச் சொக்கரை யாண்டும் இடையறாது தூமலர் தூவித் தொழுதுவர வேண்டும் என்னும் உள்ளக்காதல் உந்தவே பெருமானை நோக்கி,

"மதுரா புரிச்சொக்க ஞானப்பிர காசன் மடாலயத்தில்
சதுரான காரியஞ் செய்ததென் னேயிந்தத் தாரணியில்
முதிரா விளம்பிஞ்சை நற்கனி யாக்கு முறைமையென்ன
எதிரா மலமறுத் தென்னையு மாட்கொண் டிருந்தனனே"

என்ற அருமைப் பாடலால் வணங்கிப் பரவினர். பின்னர், தம்மூருக்குச் செல்லும் மனமில்லாது, சொக்கேசன் திருவருள் ஈர்க்கவே, அதிலே தளைப்பட்டு குருஞான சம்பந்தரது திருமுன்னிலையிலேயே நெடுந்தவம் இயற்றி முத்தி பெற்றனர்.

174324

மகன் தந்தைக்காற்றும் கடனையுணர்ந்த ஒருவன் தந்தையிறக்கவே அவரை வீட்டுலகம் நண்ணுவிக்க வேண்டுமே என்ற ஆசைமிக்கு, அதற்கு வழியாது என உசாவியுணர்ந்து இறுதியில் சிவஞான தேசிகர் திருவடி அடைதலே நன்று எனத் தெளிந்தனன். விரைந்து, தன் காதற் கிழத்தியையும் உடன் அழைத்துக்கொண்டு குரு தரிசனவேட்கையில் தருமைப் பதியை அடைந்தான். அதனை ஞானக்கண்ணால் நோக்கிய குருமூர்த்திகள், "நீயிர் ஞானபுரீசுவரரை வழிபட்டு வருவீராக" எனக் கட்டளையிட்டருளினர். அவர்களும் அவ்வண்ணமே சென்றிறைஞ்சி வந்தனர். குருமூர்த்திகள் அவர்களை நோக்கி, "நும் விருப்பம் தந்தையை வீட்டுலகம் எய்துவிக்க வேண்டியது தானே; அது குருவருளால் ஈடேறிற்று" என்று அருளிச் செய்தார்கள். அருள்வேண்டி வந்தவர்கள் உவகை வெள்ளத்தில் திளைத்துத் திருவடிகளில் பன்முறை இறைஞ்சித் திருவருட் பிரசாதம் பெற்றுச்சென்றனர்.

ஒரு நற்போதில் ஞானதேசிகர் திருத்தல யாத்திரை செய்யத் திருவுளங்கொண்டு, சொக்கநாதப்பெருமான் எழுந்தருளிய பூசைப் பேட்டகத்தை அடியார்கள் திருமுடியிலே எழுந்தருளப்பண்ணிக் கொண்டு புள்ளிருக்கு வேளூரை யடைந்தார்கள். திருக்கோயில் வழிபாட்டிற்குச் சென்று செல்வமுத்துக்குமாரப்பெருமானைத்தொழுதுதமிழ்க் குழகனின் தண்ணருட் பெருக்கால் பாமலர் புனைந்து சாத்தி ஏத்திப்பரவினர். சின்னாட்கழிந்த பின்றை, தில்லைச் சிற்றம்பலம் போந்து நட்டம் பயின்றாடும் நாதனைக்கையாற் றொழுது கழற்சேவடிகள் பரவிப் பண்ணார்ந்த பாடல்பல பாடியருளினார்கள். அதன்பின் ஆரூர்க்கு எழுந்தருளிப் போந்து புற்றிடங்கொண்ட பூங்கோயில் அம்மானை வழிபட்டுக்கொண்டு, சுற்றியுள்ள பஞ்சபூத தலங்களையும் பிற

Q23

சிவத்தலங்களையும் குவித்தகை விரித்தறியா உளத்தராய் வணங்கிச் சித்தீச்சரம் அடைந்தார்கள். கமலை ஞானப் பிரகாசருடைய உபாசனு மூர்த்தியாகிய சித்தீச்சரம் தக்ஷிணுமூர்த்தியின் திருவருணேக்கத்திலே ஈடுபட்டுத் திருவருட்பாக்கள் பாடிப்பரவி சின்னுட்கள் ஆரூரிலே இருந்து. பின்னர் தென்னக யாத்திரை செய்ய விழைந்து மதுரைப் பெருநகரை அடைந்தார்கள். வெள்ளியம்பலத்துத் துள்ளிய பெருமானுகிய அண்ணல் ஆலவாயரையும் அங்கயற் கண்ணம்மையையும் வழிபட்டுத் திருமடத்தில் எழுந்தருளியிருக்குங்கால் ஒருநாள் பெரும்பிணிகொண்ட ஒருவன் வருதலைக்கண்டு அவன் மாட்டு அருள்கூர்ந்து பக்கலில் அழைத்து "நீ காளையார்தீர்த்தத்தில் மூழ்கிவா" என்று ஆணையிட்டனர். அவனும் அவ்வாறே நிறைமொழி மாந்தராம் குருவருளாணையில் பற்றுடையவனுய்ச் சென்று அந்நீருண் மூழ்கினுன். எழுந்து, தன் உடலம் மாசற்று ஒளிறுதலைக்கண்டு வியப்புற்றுக் குருவின் திருமுன் சென்று வீழ்ந்து வணங்கிச் சென்ருன்.

சின்னுள் குருமூர்த்திகள் செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமான் திருவருட்கடலிலே ஆடித்திளைத்த பின்னர், திருச்செந்தூருக்கு எழுந்தருளினுர்கள் வழியிற் பல தளிகளையும் தொழுது வணங்கித் திருச்சீரலைவாய் அணுகினுர்கள். அடியார் திருக்கூட்டம், காதலாகிக் கசிந்து அரகரவென நாதன்நாமம் நவிலாநிற்பவும் அன்பர்கள் கொடியும் குடையும் ஓர்பாலும் ஆலவட்டமும் கைவிளக்கும் தீவர்த்தியும் ஓர்பாலுமாக விருதுகள் பலவேந்திவந்தனர். குருமூர்த்திகள் எழுந்தருளுதலைக்கண்ட பெருமக்க ளெல்லாம் குருதரிசனப்புண்ணியத்தால் கண்பெற்ற பயன் கருதி மட்டிலா மகிழ்வெய்தினர். போற்றிமார்களென்பார்,

சிவிகையிலூர்ந்து சென்ற ஞானதேசிகரையும், பரிவாரங் களையும் கண்டு ''பகலில் தீவர்த்தியுடன் சிவிகையிலே செல்லுதல் கூடா'' தெனத்தடுத்தார்கள். அதுகாலை, செந்தில்வேலன் அருச்சகர் வடிவுகொண்டுவந்து போற்றி மார்களை நோக்கி, ''சிவிகையினைத் தடுத்தது ஏன்? காரணத்தை விரித்துக் கூறுக'' என்றருளினன். காரணம் அறியாப் போற்றிகள் ''இவ்வாறு இங்குவரும் வழக்க மில்லை'' என்று இதனையே காரணமாகக் கூறினர். பின்னர் சேவ்வேளாகிய அருச்சகர், ஞானுசாரியர்களுடைய பெருமையையும், அவர்கள் யாண்டும் விருதுகளோடு வரலாமென்பதற்கேற்ற சாத்திரச் சான்றுகளையும் விதந்து கூறினர். போற்றிகளோ அதற்குத்தக்க மாற்றங்கொடுக்க மாட்டாராய்த் திகைத்து வீண்வம்பிழைத்தனர். இவர்களின் பயனில் வாதத்தைக் கண்டு சினந்த அருச்சகராம் பெருமான் சிறிது சீற்றங்கொள்ளவே, அதனுல் போற்றிகள் வாய்பேசா மூங்கையராயினர். மாற்றுருக்கொண்டு வந்த மறையவரும் கரந்தருளினர். இஃதுணர்ந்த போற்றிகளும், ஞானதேசிகருடைய அருள்வலிமையினை எண்ணிவியந்து, தாங்களிழைத்த பெருந்தவற்றிற்கு நாணிக்கழுவாய் வேண்டித் தாங்களே தீவர்த்தி யெடுத்துச் சென்ருர்கள்.

ஞானமூர்த்திகள் குறிஞ்சிக்கிழவனை - செந்திற்நாதனை வழிபட்டு மீளுங்கால், போற்றிமார்கள் வந்து திருவடிகளில் பரவிப்பணிந்து 'சுவாமி! பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமையன்ரே ; எங்களை ஊமைநீக்கி அருள்பாலிக்க வேண்டும்' எனக் குழைந்து வேண்டினர். ஞான தேசிகரும், அருள்வண்ணத் திருநீற்றை அள்ளி அளித்தனர். அவர்கள் பணிந்து வாங்கி மேனியெலாம் பூசவே ஊமை நீங்கிப் பேரின்பமுற்றனர். குருமூர்த்திகளும்

பல தலங்களையும் வழிபட்டுத் தலயாத்திரை செய்து கொண்டிருந்தார்கள்.

அஞ்ஞான்று, மலைநாட்டிலே துங்கன் என்னும் அரசன் ஆட்சி புரிந்து வந்தான். அவனுக்கு ஒரேவொரு அருமைமகள் இருந்தாள். அவளைப் பிரமராக்கதம் தீண்டியிருந்தது. அவனும் எத்துணையோ மணிமந்திர மருந்துகள் கொடுத்து நீக்க முயற்சி செய்தும் முயற்சி கைகூடிற்றிலது தக்கண யாத்திரை செய்யும் குருமூர்த்திகள் திருவருட்பேறு பெற்றவர்கள் என்பதைப் பலர்வாயிலாக அறிந்தான் அரசன். பெருமகிழ்வுகொண்டு தன்மகளையும் உடன் அழைத்துக்கொண்டு வந்து ஞானதேசிகரது திருவடித் தாமரைகளிலே வீழ்ந்து பணியச் செய்து குறையிரந்தான். ஞானக்குருமூர்த்திகளும் கருணை கூர்ந்து மந்திரமாவதும் மருந்துமாவதுமாகிய திருநீற்றை அளித்தருளினார்கள். அதனை அரசன் தன் மகளுக்குப் பூசவேபிரமராக்கதம் நீங்கியது. அரசனது மகிழ்ச்சிக்கோர் அளவில்லை. இன்பக் கூத்தாடினன். சேந்தமிழ்ச் சொக்கலிங்கப்பெருமானுக்கு அபிடேக ஆராதனை செய்வித்தான். மாகேசுவரபூசையும் நடத்துவித்தான். ஞானதேசிகருக்குப் பட்டணப்பிரவேசம் முதலியன செய்வித்தான். ஆண்டுதோறும் இவ்விழா செய்ய வேண்டி, தனித்தனியாக நிலங்களை இறையிலிசெய்து உரிமையாகக் கொடுத்தான். இறுதியாகப் பணிந்திறைஞ்சி விடைபெற்றுத் தன் நாட்டிற்குச் சென்றான்.

இவ்வாறு வியத்தகு செயல்புரிந்தருளித் தெக்கண யாத்திரை முடித்துத் தருமைவந்து மடாலயத்தில் எழுந்தருளியிருந்தபோது ஒருநாள் திருவுலாப் போந்தார்கள். அதுகாலை, பிரமராக்கதமொன்று குருநாதர் திருவடிகளில்

வீழ்ந்து வணங்கி நின்றது. குருநாதர், 'துங்கன் மகளைப் பற்றியிருந்த பிரமராக்கத' மேன வறிந்து, என்னசெய்ய வேண்டுமென்று வினவினூர்கள். பிரமராக்கதம் 'நல் லோரை நலியும் இவ்வுரு நீங்கி நற்கதியடையத் தேவரீர் திருவுளம் பற்றவேண்டும்' என்று வேண்டிக்கொண்டது. அதற்கிரங்கிய குருநாதர் தாஞ்செய்துவரும் அனுட்டானங் களில் ஒருகால அனுட்டானத்தை அதற்கு அளித்தருளி னூர்கள். உடனே அது தன்னுருநீங்கித் தேவவுருப்பெற்று விண்ணுலகடைந்தது. அதுமுதல் இன்றளவும் இக் குருமூர்த்திகளுக்குப்பின் வழிவழியாக வரும் குருமூர்த்தி கள் யாவரும் ஒருகால சந்தியாவந்தனத்தை அதிகமாகச் செய்துவரும் வழக்கம் நடைபெறுவதறிந்து இன்புறக் கூடிய சான்றாகும்.

இவ்வண்ணம் சின்னுட்கள் செல்லாநின்றன. (கி. பி. 1740 ஆம் ஆண்டு) சிவஞான தேசிகர் திருவுள்ளம் காசி யாத்திரையின்பாற் சென்றது. சிவனடியே சிந்திக்கும் சிவஞான அடியார்கள் மருங்கு சூழக் காசிப் பெருநகர்க்கு எழுந்தருளினூர்கள். அங்குக் கோயில்கொண்டருளும் துண்டிராசகணபதி, விசுவநாதர், அன்னபூரணி, கேதார நாதர், காலவைரவர் முதலிய கடவுளர்களை வழிபட்டார்கள். அஞ்ஞான்றெழுந்த இடையருப் பேரன்பு அருளாகத் தழைக்கவே, தற்போதுள்ள ஆன்மாக்களையும் நன்னெறிப் படுத்த எண்ணியது அவர்கள் திருவுள்ளம். அதனுல், பலதுறைப்பட்ட திருவருட்பாக்களை இயற்றியது. குரு மூர்த்திகள் சின்னுள் காசிப்பதியிற்றங்கி தருமபுரத்திற் கெழுந்தருளி அருட் செங்கோல் புரிந்து வந்தார்கள். இறுதியாக, சச்சிதானந்த தேசிகருக்கு ஞானபிடேகஞ் செய்து ஐப்பசித்திங்கள் கிருட்டின பக்கத்துப் பத்தாம்நாள் முத்திப்பேற்றையெய்தினூர்கள்.

இக் குருமூர்த்திகளிடம் அருள் உபதேசம் பெற்ற அடியார்கள் சச்சிதானந்த தேசிகர், தமிழாகர முனிவர், சிதம்பரநாத முனிவர், திருக்கடவூர் பஞ்சாக்கர முனிவர், புன்கூர் சிவப்பிரகாச முனிவர், சங்கரகுமார முனிவர், சிவானந்த முனிவர், முத்துக்குமாரத் தம்பிரான், அக்ஷய லிங்கத் தம்பிரான், தில்லைநாயகத் தம்பிரான், காவை அம்பலவாண முனிவர், சைவ எல்லப்ப நாவலர் முதலியோ ராவார்கள்.

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளால் பாடப்பெற்ற தோத்திரப்பாக்களுள் ஸ்ரீ சட்டைநாதர்மீது செய்தருளப் பெற்றது ஆபதுத்தாரணர்மாலை என்னும் இந்நூல்.

174324



ஸ்ரீ முத்துச்சட்டைநாதர்

உ

ஸ்ரீ ஆபதுத்தாரணர் துணை

பத்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்

அருளிய

# ஸ்ரீ ஆபதுத்தாரணர்மாலை

## காப்பு

விண்ணூர் மலர்ப்பொழில் சூழ்காழி மாமலை மேலமர்ந்த
தண்ணூர் மதிபுனை வேணிய னாபதுத் தாரணன்மேல்
பண்ணூரப் பாடிய மாலைக்கு மாமுகன் பாதமும்நீள்
கண்ணூ றிரண்டுள கந்தன்பொற் பாதமுங் காத்திடுமே.

## நூல்

சீர்கொண்ட செம்பொற் றிருமேனி யுஞ்செம் முகமலருங்
கார்கொண்ட சட்டையுந் தண்டா யுதமுங் கணங்க
ளேட்டுங்
கூர்கொண்ட மூவிலைச் சூலமுங் கொண்டருள் கூர்ந்த
கொன்றைத்
தார்கொண்ட வேணியனே காழி யாபதுத் தாரணனே. 1

தெள்ளும் புழுகும் பனிநீருங்குங்குமச்சேறுஞ்செந்தேன்
விள்ளும் மலரும்நின் பாதத்திற் சாத்தி விடாமலின்பங்
கொள்ளும் படியன்பு தந்தெனை யாண்டருள் கூற்றுவ
தள்ளும் பதாம்புயனே காழி யாபதுத் தாரணனே. [னைத்

சாயாத சூலதண் டாயுத னேபச்சைச் சட்டையனே
வேயார்விண் ணோர்தொழு மேனிய னேயென் மிடி
தவிர்ப்பாய்
வாயார வுன்னைத்துதிப்போர்க்கு வேண்டும்வரமளிப்பாய்
தாயா கியஅப்ப னேகாழி யாபதுத் தாரணனே. 3

வட்டையொப் பாகு மினியசொல் மாதர் மயக்கத்திலே
பட்டையப் பாமிகயானினைத் தேன் பண்டிருவர்க்கெட்டா
நெட்டையப் பாமறை காணாத சேவடி நீயருள்வாய்
சட்டையப்பா வடுகா காழி யாபதுத் தாரணனே. 4

மட்டுப் படாத யமதூதர் வந்து வளைத்துடலைச்
சுட்டுப் பலபொடி யாக்குமுன் காத்தருள் தோடணிந்த
பட்டுப் புயத்தினுந் தண்டா யுதத்தினும் பாதத்தினுந்
தட்டுப் புழுகணி யுங்காழி யாபதுத் தாரணனே. 5

நெறியும் பொறியுந் தவமும்மெய்ஞ் ஞானமும் நீடறிவும்
பொறியும் புகழும்கொடுத்தருள் வாய்புரம் காய்ந்தவனே
குறியும் குணமும் கடந்தவ னேகுழக் கன்றுகட்டுந்
தறியின்கண் வந்தவனே காழி யாபதுத்தாரணனே. 6

அடியார் மனத்தி னினைத்த கரும மனைத்துமங்கே
முடியாத தேது முடித்தருள் வாய்முரு காரலங்கல்
கடியார் மலர்க்கொன்றை மாலிகை சூடிய கண்ணுதலே
தடியேந்திய கையனே காழி யாபதுத் தாரணனே. 7

முட்டற வாழும் பெருஞ்செல்வ மும்முத் தமிழ்க்கல்வியும்
எட்டுணை யேனுங் கொடுத்துண்டிருக்க எனக்கருள்வாய்
வட்ட மதிச்சடை யானே சிகர மலைக்கமர்ந்த
சட்டம் உடையவ னேகாழி யாபதுத் தாரணனே. 8

போய்யா கியபுவி வாழ்க்கைக் கடலிற் புகுந்தழுந்தி
மேய்யாம்இதுஎன நம்பிவிட்டேன்வினை மேலைக்கண்பார்
மையாடு கண்ணியர் பின்சேலத் தாரு வலத்திற்சென்ற
சைவா கமப்போருளே காழி யாபதுத் தாரணனே. 9

நீலக் கயல்விழி மானுர் கலவியின் நேசம்வைத்தே
ஆலைக் கரும்பது போலாய் விடாதுன் னருள்புரிவாய்
வாலைக் கலைமதி வேணியனே வடுகா அடியார்
சாலத் தோழும்ஐய னேகாழி யாபதுத் தாரணனே. 10

சேந்தமி ழோர்தோழும் தண்டாயுதமும் திருவழகும்
கந்தரமும் பச்சைக் கஞ்சுகம் தானும் கருதரிய
இந்தணி வட்டச் சடையும் கண்மூன்றும் இருபதமும்
சந்ததமும் மறவேன் காழி யாபதுத் தாரணனே. 11

படிக்கும்தண் டாயுத மேன்பார்க்கு நோய்வினை பற்றறுப்பப்
பிடிக்கும்தண் டாயுத மேண்ணருங் கோடிப்ர மாண்டமேல்லாம்
முடிக்கும்தண் டாயுத மூதண்டங் தாண்டு முகுந்தன் சேன்னி
தடிக்கும்தண்டாயுதனே காழி யாபதுத் தாரணனே. 12

அரம்பிடிக் கும்கண்ணி ஞராசை மேற்கோண் டலைவதேல்லாம்
வரம்பிடிக் கும்கருத் துண்மைகண் டார்க்கில்லை வந்தருள்கூர்
உரம்பிடிக்கும்துட்டவேதாளபூதத்தையோட்டிவேட்டித்
தரம்பிடிக் கும்வடுகா காழி யாபதுத் தாரணனே. 13

பேருகா ரணியத்தில் யான்சேன்ற போதும் பேரும்
பொருளால்
வருகாதல்கோண்டிரவில்துயில்போதுமிம்மண்டலத்தில்
துருவா தியர்கள் சபையில்சேல்போதும் துணையெனக்கு
வருவா யுனைநம்பி னேன்காழி யாபதுத் தாரணனே. 14

சேம்மலை மீதினில் சாமள கஞ்சுகம் சேர்வடிவும்
அம்மலை போலும் நற்றண்டாயுதமும் கோணடன்புடனே
எம்மலை வேதம் தவிர்த்தருள்வாய்கடுவேந்திவிண்ணோர்
தம்மலைவோட்டும்தமிழ்க்காழி யாபதுத் தாரணனே. 15

மாடும்தண் டாமம்அணிந்திடும் மைந்தரும் மாதர்களும்
வீடுமதண் டாமம்எனமகி ழாமல்உன் மேன்மலர்த்தாள்
பாடும்தண் டாத்தமிழ் ஈந்தருள் பூத பசாசுகளைச்
சாடும்தண் டாயுதனே காழி யாபதுத் தாரணனே. 16

வேடிக்கும் பரவை முரசதிர் காமனை வீறழியப்
போடிக்கும் கனல்விழிப் புண்ணிய னேபுவி யோர்கள்
நேஞ்சம்
துடிக்கும் போல்லாத பிசாசுகள் தம்மைத் துரத்திவேட்டி
அடிக்கும் தண்டாயுத னேகாழி யாபதுத் தாரணனே.17

இலையேன் றேருவர்க் கிதம்சோல்லி யேன்றும்இரங்கி
நில்லா
நிலையேன்று நீஅளித் தாண்டருள் வாய்நித்த னேபுகலி
மலையோன் றியவடு கேச கங்காள வயிரவனே
தலையோன் றியகைய னேகாழி யாபதுத் தாரணனே.18

பாடிக்கொண் டாடிப் பணிந்திடும் அன்பர்தம் பாதமலர்
சூடிக்கொண் டாடித் திரிந்திட வேயெனைத் தொண்டு
கொள்வாய்
தேடிக்கொண் டாடி வருவோர்கள் வல்வினைச் சிக்கை
யெல்லாம்
சாடிக்கொண் டாடிய வாகாழி யாபதுத் தாரணனே. **19**

தெவ்விடத் தாய திசைபிழைத் தாலும் சினஅரவம்
கவ்விடத் தான்வெய்ய கான்நடந் தாலும்கருதரிய
எவ்விடத் தேனும்இருந்தாலும் என்றன் இடரையெல்லாம்
தவ்விட நீவரு வாய்காழி யாபதுத் தாரணனே. **20**

நீடும்தண் டாயுதம் நித்தம்தண் டாயுதம் நித்தம்அன்பர்
தேடும்தண் டாயுதம் ஈரே ழுலகமும் சேவித்துக்கொண்
டாடும்தண் டாயுதம் அண்டாது பேய்கள் அலறிவிழச்
சாடும்தண் டாயுத னேகாழி யாபதுத் தாரணனே. **21**

வங்கம் கலிங்கம் குலுங்கம் தெலுங்கம் மராடம்முதல்
எங்கெங்கும் போக இடர்வரும் போதும் இனிமையுடன்
அங்கங்கு நீதுணை யாய்வரு வாய்அந்தி வான்மதியம்
தங்கும் சடாடவி யாய்காழி யாபதுத் தாரணனே. **22**

ஈனம் தரும்இதென்றெண்ணுமலே யிடும்பான்மேலிந்திங்
கூனம் தரும்இந்தச் செல்வருக் கிச்சையுரை
உரைத்தேன்
வானம்தரும்உம் பருக்காய் அவுணரை மாட்டிநல்ல
தானம் தரும்அண்ண லேகாழி யாபதுத் தாரணனே. **23**

அடிக்குள் பணியும்நின் அன்புரைக் காயும் அவர்உடலே
வேடித்து ப்போடிபட நீவிழிப்பாய் எட்டுவெற்பும்சேற்றே
இடித்துப் போடிபடவல்லாயுதம்பதினேட்டும்உன்கைத்
தடிக்குப் பேரியதுண் டோகாழி யாபதுத் தாரணனே. 24

உளப்பரிவில்லவர்தம்மில்லில்சேன் றங்குரைஉரைத்துக்
கோளப்பரி வான மோழிபல கூறிக்குறைகள் சோல்வீர்
இளைப்பறக்காப்பவன் யாவன்என் றுல்அர விந்தம்
எல்லாம்
தளைப்பருஞ் செல்வி வளர்காழி யாபதுத் தாரணனே. 25

கலையாரும் முத்தமிழ்க் கல்வியும் யோகமும் காசினியில்
நிலையா கியபேருஞ் சேல்வமும் நீதியும் நீயருள்வாய்
மலையாசன வடுகேச கங்காள வயீரவனே
தலைமாலை சூழ்புய னேகாழி யாபதுத் தாரணனே. 26

வாட்கோண்ட கண்ணியர் மாயையில் வீழ்ந்து
மருண்டுபல
நாட்கோண்ட தீயேனை யாட்கோண்டு காத்தருள்
நல்குவையோ
கோட்கோண்ட காலனுக் கஞ்சிய பாலனைக் கூர்ந்
தளித்துத்
தாட்கோண்டு காத்தவ னேகாழி யாபதுத் தாரணனே.

நிட்டைக்குள் வாழ்வும் நின்னடிபோற்றவும்நோர்ந்தறியா
வோட்டைச் சடலத்தை யான்எடுத் தேன்ஒளி ஓங்கு
சேம்போற்
பட்டைப்புனைந்த புயமீது மாயன் படிவம்தந்த
சட்டைக் கிடம்தந் தருள்காழி யாபதுத் தாரணனே. 28

சொல்லா கியபொருள் எல்லாம் உணர்ந்துனைத்
தோத்திரிக்க
வல்லார் தமைத்தொழ வல்லான் எனஎன்னை வைப்ப
துண்டோ
கல்லாற்சிலைதொட்டநல்லார்எல்லார்க்கும்கதியளிக்கும்
சல்லாபம் ஆனவ னேகாழி யாபதுத் தாரணனே. 29

இந்திரன் வாழ்க்கையும் நான்முகன் வாழ்க்கையும்
ஈர்ந்துளவோன்
நந்தமில்வாழ்க்கையும்பெற்றாலும்நின்னடியார்களுக்குப்
புந்திசெய் வாழ்க்கையை ஒவ்வாது காண்ஒளி பூண்ட
இளஞ்
சந்திர சேகரனே காழி யாபதுத் தாரணனே. 30

ஸ்ரீ ஆபதுத்தாரணர்மாலை முற்றிற்று.

உ
சிவமயம்

# ஸ்ரீ பைரவர்

# அஷ்டோத்தர சதநாமங்கள்

ओं आनन्दभैरघाय नमः
,, असिताङ्गभैरवाय नमः
,, रुरुभैरवाय नमः
,, चण्डभैरवाय नमः
,, क्रोधभैरवाय नमः
,, उन्मत्तभैरवाय नमः
,, कपालभैरवाय नमः
,, भीषणभैरवाय नमः
,, संहारभैरवाय नमः
,, आनन्दाय नमः
,, दीर्घपिङ्गलाय नमः
,, जटाधराय नमः
,, भिक्षाहराय नमः
,, नरहराय नमः
,, पीतवर्णाय नमः
,, भीमरूपाय नमः
,, पिनाकभृते नमः
,, उद्दण्डभैरवाय नमः

| | | |
|---|---|---|
| ओं | उग्राय | नमः |
| ,, | विश्वरक्षसे | नमः |
| ,, | पुरुषाय | नमः |
| ,, | वटुकाय | नमः |
| ,, | वनवासाय | नमः |
| ,, | वरदाय | नमः |
| ,, | सन्तुष्टाय | नमः |
| ,, | क्षेत्रपालकाय | नमः |
| ,, | स्वर्णरूपाय | नमः |
| ,, | सुराध्यक्षाय | नमः |
| ,, | सुराय | नमः |
| ,, | स्वर्णभूषणाय | नमः |
| ,, | महाभैरवाय | नमः |
| ,, | कलानाथाय | नमः |
| ,, | कालान्तकाय | नमः |
| ,, | कङ्कालधराय | नमः |
| ,, | कालभैरवाय | नमः |
| ,, | कल्पान्तभैरवाय | नमः |
| ,, | कपालमालाधराय | नमः |
| ,, | कपालिने | नमः |
| ,, | कलिदोषहराय | नमः |
| ,, | शूलिने | नमः |
| ,, | धन्याय | नमः |
| ,, | दयानिधये | नमः |

| | | |
|---|---|---|
| ओं | दण्डपाणये | नमः |
| ,, | कल्याय | नमः |
| ,, | दानवारये | नमः |
| ,, | द्दिगम्बराय | नमः |
| ,, | दिव्यमूर्तये | नमः |
| ,, | दिव्याय | नमः |
| ,, | दुष्टनिग्रहाय | नमः |
| ,, | सवित्रे | नमः |
| ,, | विजयाय | नमः |
| ,, | विमलाय | नमः |
| ,, | वीराय | नमः |
| ,, | शूराय | नमः |
| ,, | श्ववाहनाय | नमः |
| ,, | मार्ताण्डभैरवाय | नमः |
| ,, | मान्याय | नमः |
| ,, | मानदाय | नमः |
| ,, | मन्मथनाशनाय | नमः |
| ,, | तीर्थप्रदाय | नमः |
| ,, | तीर्थकराय | नमः |
| ,, | तीर्थवासाय | नमः |
| ,, | अभयप्रदाय | नमः |
| ,, | भगवते | नमः |
| ,, | खण्डपरशवे | नमः |
| ,, | सर्पभूषाय | नमः |

ओं अलङ्कृताय नमः
,, अमायाय नमः
,, आदित्यरूपाय नमः
,, आताम्राय नमः
,, अनुपूज्याय नमः
पराक्रमाय नमः
,, सर्वार्तिहराय नमः
,, त्रिनेत्राय नमः
,, सर्वेशाय नमः
,, मद्मालाय नमः
,, माषापूपप्रियाय नमः
,, महाक्षेत्राय नमः
,, लोकरक्षकाय नमः
,, लोकेश्वराय नमः
,, महाभूतभयङ्कराय नमः
,, महामान्याय नमः
,, रक्तरूपाय नमः
,, ज्वालाकेशाय नमः
,, शशिधराय नमः
,, रक्ताङ्गाय नमः
,, तेजोमयाय नमः
,, शूलहस्ताय नमः
,, कपालमालाभरणाय नमः
,, पाशहस्ताय नमः

ॐ डमरुकधराय नमः

,, त्रिलोचनाय नमः

,, कोलाहलप्रियाय नमः

,, पिशाचनाथाय नमः

,, बालरूपाय नमः

,, भूतरूपाय नमः

,, नागयज्ञोपवीताय नमः

,, अभीष्टसिद्धिप्रदाय नमः

,, अङ्कुशधराय नमः

,, त्रिशूलधराय नमः

,, अष्टभुजाय नमः

,, दंष्ट्रादन्ताय नमः

,, आज्ञाचक्राय नमः

,, आकाशभैरवाय नमः

,, ज्योतीरूपाय नमः

,, व्योमरूपाय नमः

,, घनागमाय नमः

,, श्रीकालभैरवाय नमः

600 008
124324

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

## கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமய உண்மைப்பொருள் முதலியவற்றைக் குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந் துணையாவது. கையொப்பத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 2—25 வெளிநாடு ரூ. 3—00


சேயலாளர்,

"ஞானசம்பந்தம்" காரியாலயம்,

தருமையாதீனம், மாயூரம் அஞ்சல்,

தஞ்சை மாவட்டம்.